# துறைமுகத்தில் குடியரசு தின விழா



காரைக்கால் கீழவாஞ்சூரில் உள்ள மார்க் காரைக்கால் துறைமுகத்தில் குடியரசு தின விழா நடைபெற்றது. விழாவில் முதன்மை செயல் அதிகாரி கேப்டன் கே.என்.ரமேஷ் கலந்து கொண்டு தேசியக்கொடியை ஏற்றி வைத்து, துறைமுக பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து துறைமுக வளாகத்தில் மரக்கன்றுகள் நடும்பணியை அவர் தொடக்கி வைக்க, அதிகாரிகளும், அலுவலர்களும் நூற்றுக்கணக்கான மரக்கன்றுகளை நட்டனர். நிகழ்ச்சியின்போது பாதுகாப்பு படையினர் தற்காப்புக்கலை சாகசங்களை செய்து காட்டினார்கள்.